**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 04.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 32/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-1 |
| **சாட்சியின் பெயர்** | : | சுந்தர் ராஜ் |
| **தந்தை பெயர்** | : | அழகேசன் |
| **கிராமம்** | : | செம்மங்குடி |
| **தாலுக்கா** | : | வலங்கைமான் |
| **தொழில்** | : | துப்புறவு பணியாளர் |
| **வயது** | : | 48 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் துப்புறவு பணியாளராக பணி செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சார்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் கள்ளர் வகுப்பை சார்ந்தவர். என்

வீட்டுக்கு எதிர் திசையில் எதிரியின் வீடு உள்ளது. நான் துப்புறவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். எதிரி விவசாயம் செய்து வருகிறார். எங்கள் வீட்டிற்கு எதிராக உள்ள எதிரி அவர் வீட்டை பழுது பார்க்கும் வேலை செய்து வந்தார் அவ்வாறு பழுது பார்க்கும் வேலை செய்யும் போது கடந்த 15.02.2025 ஆம் தேதி மாலை 3.30 மணி அளவில் ஆஜர் எதிரி வீட்டில் மேற்கூறையில் காங்கிரீட் போடும் வேலை நடைபெற்றது. அப்போது எனது வீட்டிற்கு வரும் மின்சார வயர் அவரது வீட்டு வழியாக வந்துக் கொண்டிருந்தது. நான் என் வீட்டிற்கு வரும் ஈபி வயர் மூங்கில் குச்சி மூலமாக வந்து கொண்டிருந்தது அது தாழ்வாக இருந்ததன் காரணமாக மின் கம்பத்தில் இருந்து எனது வீட்டிற்கு மின் வயரை மாற்றி தரும்படி கேட்டார். எனக்கு எலக்ட்ரிக் வேலை எதும் தெரியாது என்று சொன்னேன். என்ன பற புண்ட மகனே, தேவடியா மகனே என்று என்னை எதிர்த்து பேசுகிறாயா என்று கேட்டார். நான் எதிர்த்து பேசவில்லை என்று சொன்னேன் என்னை கீழே தள்ளிவிட்டு அவரது செருப்பை கழற்றி எனது இடது பக்க கன்னத்தில் அடித்துவிட்டார். உன்னை அடித்தால் யார் கேள்வி கேட்பாங்க என்று என்னை கீழே தள்ளிவிட்டு செருப்பு காலால் மிதித்து கொலை வெறியுடன் அருவளை எடுத்து வெட்டவந்தார். அப்போது பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியது. அவ்வாறு வந்தவர்கள் என்னை தூக்கிவிட்டு தண்ணீர் கொடுத்தனர். வந்தவர்கள் எதிரியின் செயலை பற்றி போலீசாரிடம் புகார் கொடுக்கும் படி சொன்னார்கள். அன்றைய தினம் மாலை 4.15 மணி அளவில் வலங்கைமான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். எனக்கு புகார் எழுத தெரியாததால் எனக்கு தெரிந்த நபர் ஒருவரிடம் சொல்லி புகார் எழுதிக்கொண்டு காவல் நிலையத்தில் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையொப்பம் தான். இந்த புகார் நான் கொடுத்த புகார் தான். இந்த புகார் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மறுநாள் காலை

**நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்கள் நடந்த விவரம் சொன்னேன்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.04 17:30:48 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.